Kurusady
CATECHISM

## புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 004 - அக்டோபர் 31, 2021 முதல் நவம்பர் 6, 2021 வரை.**

## நான்காவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

திருப்பலியில் அப்பம் பிடுதல் நிகழ்வு, அடையாள செயல் நமக்கு எதை குறித்துக் காட்டுகிறது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 66)

[ ] கிறிஸ்துவின் பாடுகளை

[ ] கிறிஸ்துவின் உயிர்ப்பை

[ ] கிறிஸ்துவின் வாழ்வையும், இறப்பையும்

[ ] கிறிஸ்துவின் பணி வாழ்வினை

**கேள்வி 02**

திருப்பலியில் அப்பம் பிடுதல் நிகழ்வுக்கு பின் அருள்பணியாளர் அப்பத்தின் ஒரு துண்டை திருக்கிண்ணத்தில் இடுவது எதை குறிக்கிறது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 66)

[ ] கிறிஸ்துவின் பாடுகளை

[ ] கிறிஸ்துவின் உயிர்ப்பை

[ ] கிறிஸ்துவின் வாழ்வையும், இறப்பையும்

[ ] கிறிஸ்துவின் பணி வாழ்வினை

**கேள்வி 03**

திருப்பலியில் அப்பம் பிடுதல் நிகழ்வுக்கு பின் அருள்பணியாளர் முதலில் திரு அப்பத்தை உண்டபின் இறை மக்களுக்கு கொடுப்பதன் பொருள் என்ன? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 67)

[ ] பலியை ஒப்புக்கொடுப்பவர் என்பதன் அடையாளம்

[ ] பலி பொருளும் அவரே என்பதன் அடையாளம்

[ ] பலியை நிறைவு செய்வதன் அடையாளம்

[ ] பலிபீடமும் அவரே என்பதன் அடையாளம்

**கேள்வி 04**

ஆசை நன்மை எதை குறிக்கிறது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 69)

[ ] அருளடையாள முறையில் நற்கருணை அருந்துவதை

[ ] ஆன்மீக முறையில் நற்கருணையில் கிறிஸ்துவோடு ஒன்றிப்பதை

[ ] இறைவார்த்தைக்கு செவிமடுப்பதை

[ ] பக்தியாக திருப்பலி ஒப்புக் கொடுப்பதை

**கேள்வி 05**

நற்கருணையை ஒருவடிவத்திலா (அப்ப வடிவில்) மட்டுமா அல்லது இரு வடிவத்திலா (அப்ப இரச வடிவத்திலா) நாம் அருந்த வேண்டும் என்று திருஅவை பொதுநிலையினருக்கு அனுமதி அளிக்கிறது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 69)

[ ] அப்ப வடிவில் மட்டும்

[ ] ஆன்மீக முறையில் ஆசை நற்கருணை வழியாக

[ ] இரச வடிவில் மட்டும்

[ ] அப்ப இரச வடிவங்கள் வழியாக

**கேள்வி 06**

ஒப்புரவு அருளடையாளத்தின் பயன் என்ன? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] இறைவனோடும் அயலாரோடும் ஒப்புரவாகிட

[ ] இறைவனோடு ஒப்புரவாகிட

[ ] மனிதரோடு ஒப்புரவாகிட

[ ] இறைவனோடும் புனிதர்களோடும் ஒப்புரவாகிட

**கேள்வி 07**

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் மனம் மாறவும் பாவத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு ஒப்புரவாகவும் _______ அழைப்பு விடுத்தனர். (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] புனிதர்கள்

[ ] இறைவாக்கினர்கள்

[ ] நீதித்தலைவர்கள்

[ ] அரசர்கள்

**கேள்வி 08**

புதிய ஏற்பாட்டில் இதே நற்செய்தியை விடுத்து, மனிதரோடும் இறைவனோடும் ஒப்புரவாக அழைப்பு விடுத்தவர்கள் யார்?. (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] எலியாவும், எலிசேயுவும்

[ ] பேதுருவும், பவுலும்

[ ] இயேசுவும், சீடர்களும்

[ ] இயேசுவும், திருமுழுக்கு யோவானும்

**கேள்வி 09**

பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை கிறிஸ்து யாருக்கு கொடுத்தார்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] புனிதர்களுக்கு

[ ] திருத்தூதர்களுக்கு

[ ] இறைவாக்கினர்களுக்கு

[ ] நீதித்தலைவர்களுக்கு

**கேள்வி 10**

திருத்தூதர்களின் வழியாக வந்த ஆயர்களும், அருள்பணியாளர்களும் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை யாரிடமிருந்து பெறுகின்றனர்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] திருஅவையிடமிருந்து

[ ] பேதுருவிடமிருந்து

[ ] கிறிஸ்துவிடமிருந்து

[ ] பவுலிடமிருந்து

**கேள்வி 11**

ஒப்புரவு அருளடையாளத்தின் பணியாளர்கள் யார்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] ஆயரும், அருட்பணியாளரும்

[ ] ஆயரும், திருத்தொண்டரும்

[ ] அருட்பணியாளரும், திருத்தொண்டரும்

[ ] திருத்தொண்டரும் வேதியரும்

**கேள்வி 12**

பாவத்தை மன்னிக்கும் போது அருட்பணியாளர் ஊதா நிற தோள் பட்டையை எதற்காக அணிந்து கொள்கிறார்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] பாவ மன்னிப்பை வெளிப்படுத்த

[ ] பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை வெளிப்படுத்த

[ ] மனம் வருந்துதலையும் மனமாற்றத்தையும் வெளிப்படுத்த

[ ] இரக்கத்தை வெளிப்படுத்த

**கேள்வி 13**

"உள்ளத்தைக் கடினப்படுத்துவதைவிட பாவத்தை அறிக்கையிடுவதே மனிதனுக்கு நல்லது" என்று சொன்ன திருத்தந்தை யார்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 94)

[ ] திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பவுல்

[ ] திருத்தந்தை புனித கிளமெண்ட்

[ ] திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர்

[ ] திருத்தந்தை புனித பேதுரு

**கேள்வி 14**

"விசுவாசிகள் திருச்சபை என்னும் கட்டிடத்தின் கற்கள். அதில் இருந்து விழுந்த கற்கள் பாவிகள். அவர்களை ஒப்புரவாக்குவது கோபுரத்திலிருந்து விழுந்த கல்லை சரிப்படுத்துவதற்கு சமம்" என்று கூறியவர் யார்? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 207)

[ ] ஹெர்மஸ்
[ ] கலிலியோ
[ ] மெகலன்
[ ] சாக்ரடீஸ்

**கேள்வி 15**

"பாவங்களை அறிக்கையிடுவது செபிப்பதற்கும் நற்கருணை உட்கொள்வதற்கும் சரியான மனப்பக்குவத்தைத் தரும்" என்று சொல்லும் நூல் எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 207)

[ ] அப்போஸ்தலர்களின் வாழ்வு
[ ] அப்போஸ்தலர்களின் பணி
[ ] அப்போஸ்தலர்களின் படிப்பினை
[ ] அப்போஸ்தலர்களின் மறைசாட்சிப் பணி

**கேள்வி 16**

"தவறியவர்களிடம் குருக்கள் கருணை காட்ட வேண்டும" என்று சொன்னவர் யார்? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 207)

[ ] ஆரிஜன்
[ ] அந்தியோக்கியா இஞ்ஞாசியார்
[ ] அலெக்சாந்திரியா கிளமெண்ட்
[ ] ஸ்ர்மினா பொலிகார்ப்பு என்ற மன்னனின் வேதகலாபனை

**கேள்வி 17**

____________ காலத்தில் "பாவங்களை மன்னிக்கும் சாதனம் திருஅவையே" என்று சொல்லப்பட்டது. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 208)

[ ] ஏரோது
[ ] பாரவோன்
[ ] தேசியஸ்
[ ] முதலாம் சிக்துஸ்

**கேள்வி 18**

"வாழ்க்கையில் ஒரு முறை மட்டுமே ஒருவனுக்கு பாவமன்னிப்பு அளிக்கப்படும்" என்பதை வலியுறுத்திய சங்கம் எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 209)

[ ] நிசேயா
[ ] எல்வீரா
[ ] ஆர்லஸ்
[ ] திரிதெந்தீன்

**கேள்வி 19**

"கிறிஸ்தவ மதத்தை மறுதலித்த பாவத்திற்கு வாழ்நாள் முழுவதும் தவம் செய்ய வேண்டும" என்று சொன்ன திருத்தந்தை யார்? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 209)

[ ] திருத்தந்தை பேதுரு

[ ] திருத்தந்தை முதலாம் ஜாண் பவுல்

[ ] திருத்தந்தை இரண்டாம் ஜாண் பவுல்

[ ] திருத்தந்தை சிரிசியுஸ்

**கேள்வி 20**

"குருவிடம் செய்யப்படாத ஒப்புரவு மதிப்பற்றது, அருளடையாளம் (அருள்சாதனம்) அருளற்றது" என்று சொன்ன சங்கம் எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 213)

[ ] திரிதெந்தீன் சங்கம்

[ ] நிசேயா சங்கம்

[ ] எல்வீரா சங்கம்

[ ] அக்டே சங்கம்

**கேள்வி 21**

நலம் தரும் அருளடையாளங்கள் (அருள்சாதனங்கள்) எவை? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 80)

[ ] திருமுழுக்கு, உறுதிப்பூசுதல்

[ ] ஒப்புரவு, உறுதிப்பூசுதல்

[ ] உறுதிப்பூசுதல், திருமணம்

[ ] உறுதிப்பூசுதல், குருத்துவம்

**கேள்வி 22**

நோயில்பூசுதல் அருளடையாளம் எவ்வாறு அளிக்கப்படுகிறது? (தி. ச.998)

[ ] எண்ணெய் பூசுவதாலும், இறைவார்த்தைகளை பயன்படுத்துவதாலும்

[ ] செபிப்பதாலும், பாவத்தை மன்னிப்பதாலும்

[ ] பாவத்தை மன்னிப்பதாலும், நற்கருணை கொடுப்பதாலும்

[ ] எண்ணெய் பூசுவதாலும், செபிப்பதாலும்

**கேள்வி 23**

நோயில்பூசுதல் அருளடையாளம் யாருக்கு அளிக்கமுடியாது? (தி. ச.1007)

[ ] பாவம் செய்தவர்களுக்கு

[ ] கனமான பாவத்தில் பிடிவாதமாக நிலைத்திருப்பவர்களுக்கு

[ ] பாவத்திற்காக சிறிதளவு மனம் வருந்தியவருக்கு

[ ] திரும்ப திரும் பாவம் செய்பவருக்கு

**கேள்வி 24**

நோயில்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) வழியாக ஒரே நேரத்தில் மூன்று அருளடையாளங்கள் நிறைவேற்றப்படுகின்றது. அவற்றின் பெயர்களை தருக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 229)

[ ] திருமுழுக்கு, ஒப்புரவு, நற்கருணை

[ ] நோயில்பூசுதல், நற்கருணை, திருமுழுக்கு

[ ] ஒப்புரவு, நோயில்பூசுதல், நற்கருணை

[ ] நற்கருணை, திருமுழுக்கு, குருத்துவம்

**கேள்வி 25**

நோயில்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) வழியாக நோயாளிக்கு கொடுக்கப்படும் நற்கருணைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இன்னொரு பெயர் கூறுக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 229)

[ ] இறுதி உணவு

[ ] பாஸ்கா உணவு

[ ] இரக்கத்தின் உணவு

[ ] திருப்பயண உணவு

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [ ✔ ] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.